DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No.306/2025**

Prosecution **PW.5**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | மதன்குமார் | கிராமம் : | |
| அப்பா பெயர் : | ராஜேந்திரன் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.03.2026
எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம் வளையக்காரன்புதூரில் குடியிருந்து கல்லூரியில் முதலாமாண்டு படித்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் நான் போட்டது தான் அது என்னுடையதுதான். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். 10.01.2023 ம் தேதி தோப்பில எனது அப்பா வேலைசெய்து கொண்டிருக்கும் போது ரமேஷ் எனது அப்பாவையும், அம்மாவையும் வெட்டிவிட்டதாக கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்கு சென்று எனது அம்மாவை ஆஸ்பத்திரிக்கு கூட்டிச்சென்றேன்.

2. மதியம் 02.00 மணிக்கு நான் வீட்டிற்கு வந்தேன் அப்போது இரண்டு போலிசார் வந்தார்கள் . போலிசார் சம்பவ இடத்தை காட்டும் படி சொன்னார்கள். நான் கூட்டிச்சென்று காட்டினேன். போலிசார் போட்டோ எடுத்தார்கள். வரைபடம் வரைந்தார்கள் கையெழுத்து கேட்டார்கள் நான் கையெழுத்து செய்தேன். என்னுடன் ரஞ்சித் கையெழுத்து செய்தார். (**பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

3. பிறகு 02.40 மணியளவில் சம்பவயிடத்தில் இருந்து போலிசார் அரிவாளை கைப்பற்றினார்கள். அதற்காக என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன் என்னுடன் ரஞ்சித் என்பவர் கையொப்பம் செய்தார். (**கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ) சம்பவ இடத்தில் கைப்பற்றிய அரிவாளை காட்டினால் என்னால் அடையாளம் காட்டமுடியும். அ.சா.பொ.1 அரிவாள் தான் போலிசார் கைப்பற்றினார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. அ.சா.1 மகேஷ்வரி எனது அம்மா, அ.சா.2 ராஜேந்திரன் எனது அப்பா ஆவார். கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றப்பட்ட இடம் என்ற காலத்தில சான்றுபொருள் வயலில் எங்கிருந்து கைப்பற்றப்பட்டது குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க நானும் ரஞ்சித் என்பவரும் காவல் நிலையத்தில் எழுதாத பேப்பரில் கையொப்பம் செய்துவிட்டு சம்பவயிடத்தில் வைத்து கையொப்பம் செய்யததததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எங்கள் முன்னிலையில் எந்த வித சான்றுப்பொருளும் கைப்பறவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 எனது அம்மா என்பதால் அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்திற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.23 18:19:06 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.